**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

அசல் வழக்கு எண். 90/2023

நாள் : 07.02.2026

பி.வா.சா.1 திரு.வெங்கடேஸ்வரன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

தாவா சொத்திற்கு மேற்கே இராமநாதபுரம் தொண்டி தேசிய நெடுஞ்சாலை உள்ளது என்றால் ரோடு உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண்.40/1B என்றால் சரிதான். தாவா சொத்து 36 சென்ட் என்றால் சரிதான். உலகப்ப நாடார் எனது அம்மாவின் அப்பா ஆவார். எனது அம்மாவின் அம்மா பெயர் கல்யாணி அம்மாள். எனது அம்மாவுடன் பிறந்தவர்கள் காளிமுத்து மற்றும் காந்தியம்மாள் என்றால் சரிதான், ஆனால் என் அம்மாவுடன் பிறந்தவர்கள் மொத்தம் 7 பேர்.

உலகப்ப நாடாருக்கு ராமன்நாடார் தம்பி என்றால் சரிதான். அதனால் எனக்கு உலகப்ப நாடாரின் வாரிசு விவரங்களும், ராமன் நாடாரின் வாரிசு விவரங்களும் தெரியும் என்றால் சரிதான். ராமன்நாடாருக்கு புஷ்பம், சுப்ரமணியன், ராஜம்மாள், காந்தி, லெட்சுமி, முனியம்மாள், உலகுசுந்தரம், செல்லம்மாள், காளியம்மாள், கருப்பநாடார் ஆகியோர் வாரிசுகள் என்றால் கருப்பநாடார் அவரது வாரிசு இல்லை, மற்றவர்கள் பிள்ளைகள். ராமன்நாடாருக்கு மொத்தம் 10 பிள்ளைகள்.

தாவா சொத்துக்கு கிழக்கே பனந்தோப்பு உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கே சர்வே எண்.40/1A உள்ளது என்றால் சரிதான். அதற்கு வடக்கே ஊரணி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடமேற்கு திசையில் சிவாஜயர் என்பவரின் நிலம் உள்ளதா என்றால் எனக்குத் தெரியாது. தாவா சொத்திற்கு தெற்குப்பக்கம் ராமன்நாடாரின் பிள்ளைகளான

ராஜம்மாள், காந்தி, லெட்சுமி, முனியம்மாள், உலகுசுந்தரம், செல்லம்மாள், காளியம்மாள், கருப்பநாடார் ஆகியோருக்கு தனித்தனியாக சொத்துக்கள் உள்ளன என்றால் எனக்குத் தெரியாது. உலகப்ப நாடார், ராமன்நாடாருக்கு தாவா சொத்து உள்ளடக்கிய சொத்துக்களை கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான், சாட்சி மீண்டும் தாவா சொத்தை உள்ளடக்கி விற்கவில்லை என்று சொல்கிறார். உலகப்பநாடார் ராமன்நாடாருக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரத்தில் 1ம் இலக்க சொத்தின் நான்குமாலில் வடக்கில் ஊரணி என்றும், கிழக்கில் தென்வடல் பாதை என்றும், தெற்கில் ராமன்நாடார் நிலம் என்றும், மேற்கில் அந்த ஆவணத்தில் கண்ட 2 வது இலக்க சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் உண்மை இல்லை. அதன் விஸ்தீரணம் 7 குறுக்கம் என்று சொல்லியுள்ளார் என்றால் உண்மைதான். தாவா சொத்துகள் உள்ள பகுதியில் 1 குறுக்கம் என்பது 90 சென்ட் என்றால் சரிதான்.

மேற்படி கிரைய ஆவணத்தில் 2வது இலக்க சொத்திற்கு நான்குமாலாக ஊரணிக்கும், கிழமேல்பாதைக்கும் தெற்கு, 1வது இலக்க சொத்திற்கு மேற்கு, உலகப்பநாடார் சொத்திற்கு வடக்கு, மேற்படி ஆவணத்தில் கண்ட 3வது இலக்க சொத்திற்கு கிழக்கு என்று நான்குமால் காட்டி 2 குறுக்கம் நிலத்தை ராமன்நாடாருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் தப்பு. மேற்படி நான்குமாலில் மேற்கு பக்கம் உலகப்பநாடார் சொத்து உள்ளது. 2வது இலக்க சொத்து இரண்டு குறுக்கம் என்றால் சரிதான். இரண்டு குறுக்கம் என்றால் 1 ஏக்கர் 80 சென்ட் என்றால் சரிதான். ராமன்நாடாருக்கு 10 பிள்ளைகள் என்பதால் ஆளுக்கு 18 சென்ட் என்றால் அது பற்றி தெரியாது.

நான் முதுகுளத்தூர் வட்டம், எஸ்.காரைக்குடியில் குடியிருக்கிறேன். நான் சென்னையில் மளிகைக்கடை வைத்துள்ளேன். எத்தனை ஆண்டுகளாக சென்னையில் தொழில் செய்து வருகிறேன் என்றால் கடந்த 2 ஆண்டுகளாக சென்னையில் தொழில் செய்து வருகிறேன். அதற்கு முன்னர் மலேசியாவில்

வேலை பார்த்து வந்தேன். உலகப்பநாடார் ராமன்நாடாருக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் 3வது இலக்கச்சொத்திற்கு நான்கு மாலாக 2வது இலக்க சொத்திற்கு மேற்கு என்றும், உலகப்ப நாடார் சொத்திற்கு தெற்கு, வடக்கு மற்றும் கிழக்கு என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். அந்த சொத்தின் விஸ்தீரணம் 2 குறுக்கம் 8 மரைக்கால் விரையடி என்று சொல்லியுள்ளார் என்றால் அது தவறு. 3வது இலக்க சொத்தாக அவர் என்ன எழுதிக்கொடுத்துள்ளார் என்று எனக்குத் தெரியுமா என்றால் அவரது அண்ணன் மகன்களுக்கு எழுதிக்கொடுத்த இடத்திற்கு வடக்குபக்கம் உள்ள சொத்துதான் 3ம் இலக்க சொத்தாகும். நான் சொல்வது தவறு என்றும், ஆவணத்திற்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொல்வது சரியல்ல.

பொதுவாக இராமநாதபுரத்தில் உள் கிராமங்களில் ஊராரை வைத்து வாய்மொழியாக பிரித்து கொள்ளும் வழக்கம் இன்றளவும் உள்ளது என்றால் எனக்குத் தெரியாது. ராமன்நாடார் சொத்திற்கு எனக்கு உரிமையோ, பாகமோ இல்லை என்றால் சரிதான். ராமன்நாடார் சொத்தினை அவரது பிள்ளைகள் ஆளுக்கு 18 செண்ட் வீதம் பிரித்து கொண்டார்கள் என்றால் எனக்குத் தெரியாது. அவ்வாறு பாகம் பிரித்ததில் வடபுறம் ஒதுக்கப்பட்ட 18 செண்ட்ல் ஊரணிக்கு ¼ செண்ட் போய்விட்டது என்றும், அதனால் ராமன்நாடாரின் மகள் புஷ்பவள்ளிக்கு 17 3/4 செண்ட் பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் தவறு.

புஷ்பவள்ளிக்கு பிரித்து கொடுத்த இடத்திற்கு வடக்கில் முனியாயி என்ற முனியம்மாளின் சொத்து உள்ளது என்றால் சரிதான். அதன் வடக்கு பக்கம் ஊரணி உள்ளது என்றால் சரிதான். புஷ்பவள்ளிக்கு ஒதுக்கப்பட்ட சொத்தின் தெற்கு பக்கம் சுப்ரமணியனுக்கு 18 செண்ட் ஒதுக்கப்பட்டது என்றால் தவறு. சுப்ரமணியனுக்கு ஒதுக்கப்பட்ட 18 செண்ட் நிலம் தாவா சொத்தில் ஒரு பகுதி என்றால் சரிதான், ஆனால் சுப்ரமணியனுக்கு பாகம் பிரித்து கொடுக்கவில்லை, அவராக விற்றுவிட்டார். அதே போன்று புஷ்பவள்ளியும் 17

3/4 சென்டையும் விற்றுவிட்டார் என்றால் சரிதான். அவர்கள் இருவரிடம் இருந்துதான் ராஜேந்திரன் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதன்பின் ராஜேந்திரன் பெயரில் தாவா சொத்திற்கு பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான், அது தவறுதலாக ஏற்பட்டது.

OS.No. 31/2010 வழக்கில் கொடுக்கப்பட்ட 2 வது இலக்க சொத்து தான், இந்த வழக்கு தாவா சொத்து என்றால் சரிதான். பிரதிவாதி முனியாயி என்ற முனியம்மாள் அந்த வழக்கை தாக்கல் செய்தவதற்கு முன்பாகவே, ராஜேந்திரன் மேற்படி இரண்டு சொத்துக்களை கிரையம் வாங்கிவிட்டார் என்றால் சரிதான். அந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்னர், சொத்தின் வில்லங்கம் போட்டு பார்த்தார் என்றால் பார்க்கவில்லை. அந்த வழக்கில், இந்த வழக்கின் வாதி ராஜேந்திரனை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

OS No. 31/2010 வழக்கின் 2 வது இலக்க சொத்தாக காட்டப்பட்டுள்ள இந்த தாவா சொத்திற்கு, மேற்கு நான்குமாலாக ரோட்டை காண்பிக்கவில்லை என்றால் ஞாபகம் இல்லை. இராமநாதபுரம் தொண்டி சாலை போடப்பட்டு 100 ஆண்டுகளாக பயன்பாட்டில் உள்ளது என்றால் தவறு. எப்போது தொண்டிக்கு ரோடு போட்டார்கள் என்றால் 1975 க்கு பிறகுதான் போட்டார்கள், சுமாராக 1976 ல் போட்டார்கள். வா.சா.ஆ.11 ஆனது OS.No. 31/2010 வழக்கில் பெற்ற தீர்ப்பாணை சான்று நகல் என்றால் சரிதான். அதில் தாவா சொத்து விவரத்தில் மேற்கு நான்குமாலாக தர்மராஜ் புஞ்சை என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தெற்கு மேகவர்ணம் புஞ்சை என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிழக்கு நான்கு மாலாக யார் சொத்து காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் முனியாயி சொத்து உள்ளது என்றால் சரிதான். முனியாயி சொத்திற்கு வடக்கேதான் ஊரணி உள்ளது என்றால் சரிதான். OS No. 31/2010 ல் ஊரணிக்கு தெற்கே உள்ள

சொத்தைத்தான் தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

தாவா சொத்து இந்த வழக்கில் கண்ட வாதிக்கு 09.04.2008, 27.05.2010 ஆகிய கிரைய ஆவணங்களின்படி பாத்தியப்பட்ட சொத்து என்றும், அந்த சொத்திற்கு அவருக்கு பட்டா எண்.3015 வழங்கப்பட்டுள்ளது என்றும், அந்த சொத்தை அவர் அரசுக்கு வரி செலுத்தி அனுபவம் செய்து வந்தார் என்றும் சொல்வது சரியல்ல. இவ்வாறான நிலையில் தாவா சொத்தின் உண்மையான உரிமையாளர் பெயரில் வழக்கு தாக்கல் செய்யாமல், தங்களுக்கு தோதாக 3 ம் தரப்பினர் மீது வழக்கு தாக்கல் செய்து, அசல் வழக்கு எண். 31/2010 ல் நாங்கள் பெற்றுள்ள தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை செல்லத்தக்கதல்ல என்றும், அவை இந்த வாதியை கட்டுப்படுத்தத்தக்கதல்ல என்றும் சொல்வது சரியல்ல.

நாங்கள் உரிமை கோருகிற பாக ஆவண எண்.2414/1952 ஆவணம் தாவா சொத்தை குறிக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. மேலும் அந்த ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தானது இந்த வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும், எனவே அவருக்கு இந்த வழக்கில் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றும் சொல்வது சரியல்ல. தாவா சொத்து குறித்த முழுமையான விவரங்கள் எனக்கு தெரியவில்லை என்றும், எதிர்வழக்குரை விவரங்களும் எனக்கு முழுமையான தெரியவில்லை என்றும் சொல்வது சரியல்ல. எதிர்வழக்குரையில் சொல்லப்படாத புதிய விவரங்களை நான் எனது முதன்மை விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றும், அவை ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றும் சொல்வது சரியல்ல. பிரதிவாதி நல்ல உடல்நிலையுடன் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்கும் நிலையில் உள்ளார் என்றும், அவர் அவ்வாறு சாட்சியம் அளித்தார் உண்மை விவரங்களை சொல்லிவிடுவார் என்பதால், அவரை நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க விடாமல் நான் தடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதிதான் அவரது தரப்பு வழக்கிற்கு சாட்சியம் அளிக்க முடியும்

என்றும், அவர் சார்பாக சாட்சியம் அளிக்க மட்டும் அதிகாரம் அளிக்க முடியாது என்றும் சொல்வது சரியல்ல. அதனால் நான் அளித்துள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை.

Sd/– ஏ.கே.மெகபூப் அலிகான்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .